ஞைபிரஸர் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 06 2017 07 15

வியாழக்கிழமை காலை

ஆகாஷவாணி

செய்திகள் - வாசிப்பவர் - தலைப்புச் செய்திகள்

1) குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்களது வேட்பாளரை இறுதி செய்வதற்காக எதிர்க்கட்சிகள் இன்று புதுதில்லியில் கூடுகின்றன.

2) அஇஅதிமுக அம்மா பிரிவு திரு ராம்நாத் கோவிந்துக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்துள்ளதை அடுத்து, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளரான அவருக்கு ஆதரவு வலுப்பெற்றுள்ளது.

3) ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் உடனான மோதலில் பாதுகாப்பு படையினர் லஷ்கரே ஈ தொய்பா அமைப்பின் 3 பேரை சுட்டுக்கொன்றனர்.

4) அதிபர் டொனால்டு டிரம்பின் உதவியாளர் திரு கென்னத் ஐ ஜஸ்டர் இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்படவுள்ளார்.

5) உலக லீக் ஹாக்கி அரையிறுதி போட்டிகளில் இன்று லண்டனில் நடைபெறும் காலிறுதி போட்டியில் இந்தியா மலேசியாவை எதிர்கொள்கிறது

<><><>

குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்களது வேட்பாளரை இறுதி செய்வது குறித்து விவாதிக்க புதுதில்லியில் இன்று எதிர்க்கட்சிகள் கூட்டம் நடைபெறுகிறது.

காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி இந்த கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு ராம்நாத் கோவிந்தை பிஜேபி அறிவித்திருப்பது ஒருதலைப்பட்சமான முடிவு என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

அவரது பெயர் காங்கிரஸ் கட்சியுடன் விவாதிக்கப்படவில்லை என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு குலாம்நபி ஆசாத் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களவை முன்னாள் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திருமதி மீரா குமாரின் பெயர் குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக அறிவிக்கப்படக்கூடுமென செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி மீரா குமார் நேற்று புதுதில்லியில் திருமதி சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் இது குறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

இதனிடையே, திருமதி சோனியா காந்தி அழைத்துள்ள எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் ஐக்கிய ஜனதா தள் கலந்து கொள்ளும் என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு கே சி தியாகி தெரிவித்துள்ளார்.

இந்த கட்சி தேசிய ஜனநாய கூட்டணியின் வேட்பாளரை ஆதரிப்பது என ஏற்கனவே முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும், எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் வேட்பாளரைதான் ஆதரிக்கப்போவதாக ஆர்ஜேடி தலைவர் திரு லாலுபிரசாத் தெரிவித்துள்ளார்.

<><><><>

குடியரசுத்தலைவர் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் திரு ராம்நாத் கோவிந்த்-க்கு ஆதரவு அளிப்பது என்று அஇஅதிமுக அம்மா பிரிவு முடிவு செய்துள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிசாமி நேற்றிரவு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி திரு எடப்பாடி பழனிசாமியிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு திரு ராம்நாத் கோவிந்திற்கு ஆதரவு கோரியதாகவும், பின்னர் கட்சியின் தலைமை நிலைய நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<><><><>

காசநோய் பாதித்துள்ளோர் மத்திய அரசு திட்டத்தின்கீழ் பயன்களை பெறுவதற்கு தங்களது ஆதார் எண்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிவிக்கையின்படி ஆதார் அட்டை இல்லாதவர்கள் வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் தேதிக்குள் இந்த அட்டையை பெறுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகையோருக்கு சுகாதார அமைச்சகம், ஆதார் பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்தி தரும்.

<><><><>

மத்திய பிரதேசத்தில் மண்டுசார் மாவட்ட விவசாயிகள் போராட்டத்தை கட்டுப்படுத்த தவறிய மாவட்ட மாஜிஸ்திரேட், காவல் கண்காணிப்பாளர், நகர காவல் கண்காணிப்பாளர் ஆகியோரை அம்மாநில அரசு இடைநீக்கம் செய்துள்ளது.

இந்த அதிகாரிகள் விவசாயிகள் போராட்டம் நடைபெற்ற இம்மாதம் ஆறாம் தேதி மண்டுசார் பதவிகளில் இருந்தனர். மாவட்ட ஆட்சியராக இருந்த திரு சுதந்திரகுமார் சிங் காவல்துறை கண்காணிப்பாளராக இருந்த திரு ஒ பி திரிபாதி, நகர காவல் கண்காணிப்பாளராக இருந்த திரு கிருஷ்ணா சாயி தோட்டே ஆகியோர் முதலில் இடமாற்றம் செய்யப்பட்டு பணிஇடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் விவசாயிகளின் போராட்டத்தின்போது நிலைமையை கட்டுப்படுத்த தவறியதாக மாநில அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த போராட்டத்தின்போது ஐந்து விவசாயிகள், காவல்துறை துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

<><><>

மும்பை பெருநகர பகுதியில் ஐந்து ரயில் நிலையங்களை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு ரயில்வே அமைச்சர் திரு சுரேஷ் பிரபு உத்தரவிட்டுள்ளார்.

இந்த திட்டம் குறித்து மும்பையில் அமைச்சர் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

ரயில் நிலைய சீரமைப்பு திட்டத்தின்படி பயணியர் வசதிகள் மேம்படுத்தவும், ரயில் நிலையத்தை சுற்றியுள்ள ரயில்வே நிலத்தை வர்த்தக ரீதியில் பயன்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் நாடெங்கும் தெரிவு செய்யப்பட்ட 400 ரயில் நிலையங்களில் மும்பையில் லோக்மானிய திலக் முனையம். தானே. மும்பை –சென்ட்ரல், பாந்த்ரா முனையம், போரிவாலி ஆகிய ஐந்து ரயில் நிலையங்கள் அடங்கும்.

<><><>

தகவல் ஒலிபரப்புத்துறையின் புதிய செயலாளராக திரு என் கே சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு அஜய் மிட்டலுக்கு பதிலாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு அஜய் மிட்டல் பணியாளர் மற்றும் பயிற்சித்துறையின் செயலாளராக பொறுப்பேற்கவுள்ளார்.

மத்திய உள்துறை செயலாளராக திரு ராஜவ் தாபா செப்டம்பர் மாதம் முதல் தேதி பணியேற்கவுள்ளார்.

தற்போது அத்துறையின் செயலாளராக உள்ள திரு ராஜீவ் மெஹ்ரிஷி ஆகஸ்ட் மாதம் முப்பதாம் தேதி பணிக்காலத்தை முடிக்கிறார்.

பொருளாதார விவகாரங்கள்துறை செயலாளராக திரு சுபாஷ் சி கார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

<><><><>

சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக 6 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களான திருமதி. பவானி சுப்பராயன், திரு. ஜெகதீஷ் சந்திரா, திரு. சுவாமிநாதன், திரு. அப்துல் குத்தூஸ், திரு. தண்டபாணி, திரு. ஆதிகேசவலு ஆகியோர் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

<><><><>

ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் உடனான மோதலில் பாதுகாப்பு படையினர் லஷ்கரே ஈ தொய்பா அமைப்பின் 3 பேரை சுட்டுக்கொன்றனர்.

காக்காபோரா பகுதியில் 3 பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த உளவுத் தகவல் அடிப்படையில் பாதுகாப்பு படையினர் தேடுதல் நடவடிக்கையில் நேற்றிரவு ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட சண்டையில், இந்த பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் பாரமுல்லா மாவட்டம் சோப்பூர் நகரில் ஏற்பட்ட மோதலில் இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

<><><><>

விண்வெளி, கடல்சார் தொழில்நுட்பம் உள்ளிட்ட அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும், ரஷ்யாவும் உடன்பட்டுள்ளன.

ரஷ்யாவின் சைபீரியா பகுதி நகரமான நோவிசிபிரிஸ்க் நகரில் நேற்று நடைபெற்ற இந்தியா-ரஷ்யா விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பு குழுவின் முதலாவது கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு பாதுகாப்பு அமைச்சர் திரு அருண் ஜேட்லியும் ரஷ்ய துணை பிரதமர் திரு டிமிட்ரி ரோஜிஜின்னும் கூட்டாக தலைமையேற்றனர்.

முன்னதாக ராணுவத் தளவாடங்கள் உற்பத்தியில் முதலீடு செய்ய முன்வருமாறு ரஷ்ய நிறுவனங்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. அருண்ஜேட்லி அழைப்பு விடுத்தார்.

அரசு முறை பயணமாக ரஷ்யா சென்றுள்ள அவர், நேற்று மாஸ்கோவில் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

<><><><>

இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக அந்நாட்டு அதிபர் டொனால்டு டிரம்பின் உயர்நிலை உதவியாளர் திரு கென்னத் ஐ ஜஸ்டர் நியமிக்கப்படவுள்ளார்.

62 வயதான திரு ஜஸ்டர் தற்போது அதிபரின் சர்வதேச பொருளாதார விவகாரங்கள்துறை துணை உதவியாளராக உள்ளார்.

இவரது நியமனத்தை அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபை உறுதி செய்தால் அவர், தற்போதைய தூதர் திரு ரிச்சர்டு வர்மாவுக்கு பதிலாக நியமிக்கப்படுவார். திரு வர்மா டிரம்ப் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் தமது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

அதிபர் மாளிகையில் உள்ள அனைவரிடமும் வலுவான நல்லுறவுகளை திரு ஜஸ்டர் கொண்டிருப்பதாக அதிபர் மாளிகையின் துணை செய்தி தொடர்பாளர் லிண்ட்சே இ வால்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

எனினும், திரு ஜஸ்டர் நியமனம் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

<><><>

சிரியா நாட்டின் ராக்கா நகரில் சிக்கியுள்ள சிவிலியன் மக்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று ஐநா தலைமைச் செயலாளர் திரு அண்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நகரில் உள்ள ஐஎஸ் தீவிரவாதிகளை அகற்றுவதற்கு அமெரிக்க ஆதரவிலான படைகள் தயார் செய்துவரும் நிலையில், இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இந்த நகரில் சென்றடைய முடியாத பகுதிகளில் சிக்கியுள்ள சிவிலியன் மக்கள் சிலர் பல ஆண்டுகளாக உணவும், மருத்துவ வசதியும் இன்றி அவதிப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிவிலியன் மக்கள் அதிக அளவில் கொல்லப்படுவதாகவும், காயப்படுத்தப்படுவதாகவும், இடமாற்றப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியனவும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

<><><>

ஈராக்கில் மோசூல் நகரின் பழமையான அல் நூரி மசூதியையும், அதன் பிரசித்திப்பெற்ற சாய்ந்த மினாரட் கோபுரத்தையும் ஐஎஸ் தீவிரவாதிகள் தகர்த்துள்ளனர்.

மோசூல் நகரில் பெரிய மசூதி என பெயர்பெற்ற மத்தியகாலத்தைச் சேர்ந்த இந்த மசூதியில்தான் 2014ஆம் ஆண்டு ஐஎஸ் தலைவர் அபு பாக்கர் அல் - பாக்தாதி, ஐ எஸ் அமைப்பு பிடித்த ஈராக் மற்றும் சிரியா பகுதிகளை இணைத்து இஸ்லாமிய காலிபேட் அமைப்பை பிரகடனப்படுத்தினார்.

இந்த மசூதியின் வரலாற்றுப் புகழ் மினாரட் கோபுரம் 800 ஆண்டுகள் பழமையானது.

இந்த மசூதிக்கு ஐம்பது மீட்டர் தொலைவில் ஈராக் ராணுவம் வந்தடைந்தபோது, ஐஎஸ் பயங்கரவாதிகள் வரலாற்றில் இடம்பெற்ற வேண்டிய இந்த அழிவுச்செயலில் ஈடுபட்டனர் என்று ஈராக் ராணுவத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

<><><><>

உலகின் மக்கள் தொகை தற்போதுள்ள 760 கோடியிலிருந்து இரண்டாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் 980 கோடியாக உயரும் என்று ஐநா அறிக்கை தெரிவிக்கிறது.

7 ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவை மிஞ்சிவிடும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

தற்போது உலக மக்கள் தொகையில் 3ஆம் இடத்தில் உள்ள அமெரிக்காவுக்கு பதிலாக 2050-ல் நைஜீரியா அந்த இடத்தை பிடிக்கும் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

ஐநாவின் பொருளாதார சமூக விவகாரங்களுக்கான துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

<><><><>

உலக லீக் ஹாக்கி அரையிறுதி போட்டிகளில் இன்று லண்டனில் நடைபெறும் காலிறுதி போட்டியில் இந்தியா மலேசியாவை எதிர்கொள்கிறது

இந்திய நேரப்படி இரவு எட்டு மணிக்கு போட்டி தொடங்குகிறது.

பி குழுவில் இடம்பெற்றுள்ள இந்தியா, இரண்டாம் நிலையில் உள்ளது.

இந்த குழுவில் நெதர்லாந்து முதலிடத்திலும், கனடா, பாகிஸ்தான் ஆகியன முறையே 3-வது 4-வது இடங்களிலும் உள்ளன.

<><><><>